# மயிலாடுதுறை நகராட்சி

**2018–ம் ஆண்டு ஜூலை மாதம் 20–ந்தேதி வெள்ளி கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற அவசரக்கூட்ட நடவடிக்கை.**

**முன்னிலை:– திரு. எம். காந்திராஜ், பி.காம்., எம்.பி.ஏ., தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர் (கூ.பொ) மயிலாடுதுறை நகராட்சி**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| **20.07.2018** | 1) மயிலாடுதுறை நகராட்சியில் 1971 ஆம் ஆண்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டு 2 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. இதன்படி கடந்த 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக குடிநீர் திட்டம் மேம்படுத்தப்பட்டு மேலும் 3 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு மொத்தமாக 5 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மூலமாக 5 குடிநீர் விநியோக மண்டலங்களாக பிரிக்கப்பட்டு தினசரி 7.46 MLD சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு 86 LPCD என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சியில் மொத்தம் உள்ள 25,180 குடியிருப்புகளில் 10,696 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 11,555 குடியிருப்புகளுக்கு புதியதாக குடிநீர் இணைப்பு வழங்கும் பணிக்கு TUFIDCO மூலம் வட்டியில்லா கடனாக ரூ.207.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டு உள்ளது.<br>மேலும் 29.06.2018 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்ட நடவடிக்கையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் அறிவுறுத்தியதற்கிணங்க அனைத்து பகுதிகளுக்கும் தினமும் சீரான முறையில் குடிநீர் வழங்க ஏதுவாக தற்போதுள்ள குடிநீர் விநியோக முறையை (Distribution System) சரிசெய்து அனைத்து பகுதிகளுக்கும் ஒரே மாதிரியான குடிநீர் அழுத்தத்துடன் கூடிய விநியோக முறையாக (District Metering Area) மாற்றி அமைக்க கலந்தாலோசகர் நியமித்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும் மேலும் இதற்கான செலவீனத்தை Project Development Grant Fund (PGDF) அல்லது Project Preparatory Fund (PPF) நிதியின் கீழ் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்:367**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் : 4430/2017/இ1 | |
| 368 | 2) இந்நகராட்சியில் 2107–2018–ஆம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான படிவம் மற்றம் பதிவேட்டு பொருட்களை கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ள நகர் மன்ற தீர்மான எண்.251 , நாள்.27.12.2017 ரூ. 4,00,000/– அனுமதிக்கப்பட்டது. தற்போது கூடுதலாக பொருட்களை வாங்கவேண்டி இருப்பதால் மீண்டும் கூடுதல் தொகையாக ரூ.1.50.000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.3216/2017/பி3 | **தீர்மான எண்:368**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 369 | 3) மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்ட இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது 31.08.2018–ம் தேதியுடன் முடிவடைவதால் மேலும் மேற்படி பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி உள்ளதால் மூன்று ஆண்டு பணியினை தொடர்ந்து செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.331.79 (முன்னூற்று முப்பத்து ஒரு லட்சத்து எழுபத்து ஒன்பதாயிரம்) ஆகும் இப்பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையருக்கு திட்ட மதிப்பீட்டை அனுப்பி வைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இச்செலவினத்தை பாதாள சாக்கடை நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.7224/99/இ2 | **தீர்மான எண்:369**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 370 | 4) மயிலாடுதுறை நகராட்சியின் பொது சுகாதார பிரிவில், குப்பைகள் அகற்ற பயன்படுத்தப்படும் டிராக்டர் டிப்பர் வாகனம் எண்.TN51.P.3556 & TN51.P.3558-க்கு தகுதி சான்று புதுப்பித்தல் தொடர்பாக பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.80000/–(என்பதாயிரம்)–ஐ நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.** 2727/2018/எச்1 | **தீர்மான எண்:370**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 371 | 5) மயிலாடுதுறை நகராட்சிக்கு முடிகண்ட நல்லூர் கொள்ளிடம் ஆற்றில் அமைந்துள்ள தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து சுமார் 24 கி.மீ தூரம் பிரதான குடிநீர் குழாய்கள் அமைத்து குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு இந்நகராட்சி பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டியில் சேகரித்து குடிநீர் விநியோக செய்யப்பட்டு வருகிறது. இப்பணியால் அவ்வப்போது பிரதான குழாய்களில் உடைப்புகள் ஏற்பட்டு குடிநீர் வீணாகி வரும் சூழ்நிலை ஏற்படுவதால் அதனை உடனுக்குடன் கண்டறிந்து அதனை சீர் செய்திட ஓர் ஆண்டு காலத்திற்கு (ஜீலை 2018 – ஜீன் 2019) வரை ஆகும் உத்தேச செலவீனம் ரூ.10.00 லட்சம் (பத்து லட்சம் மட்டும்) ஆகும் | **தீர்மான எண்:371**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இதனை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் : 3362/2018/இ2 | |
| 372 | 6) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் அறிவுரையின்படி மயிலாடுதுறை நகராட்சி பூங்காவில் ON SITE COMPOST PLANT அமைத்திட ஏதுவாக இரண்டு இடங்களில் 1)சுப்ரமணியபுரம் பூங்கா 2) பெசன்ட் நகர் பூங்கா ஆகியவற்றில் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவீனம் ரூ.3.00 (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும் ) ஆகும் . இதனை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண் : 3363/2018/இ2 | **தீர்மான எண்:372**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 373 | 7) மயிலாடுதுறை நகராட்சியில் சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2015–2016ன் கீழ் இந்நகராட்சி உரக்கிடங்கில் ரூ 210.00 லட்சம் மதிப்பீட்டில் ( Bio Mining ) உயரிய செயலாக்கம் முறையில் உரக்கிடங்கில் குவிந்துள்ள குப்பைகளை அகற்றி இடத்தினை மீள பெரும் அமைப்பு உருவாக்கிட ஏதுவாக இந்நகராட்சி உரக்கிடங்கில் குவிந்துள்ள குப்பைகளை துல்லியமாக அளவீடு செய்து தர இயக்குநர், சுற்றுசூழல் ஆய்வு மையம், அண்ணா பல்கலைகழகம், சென்னை–25 அவர்களுக்கு கடிதம் அனுப்பபட்டதில் இதற்குண்டான செலவின தொகை ரூ.177000/– (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தி ஏழாயிரம் மட்டும்) ஆகும் எனவும் இந்த தொகையினை The Director, Center for Technology Development and Transfer (CTDT), Anna University, Chennai-25 என்ற முகவரிக்கு வங்கி வரைவோலையாக அனுப்பி வைத்திட கோரி மேற்படி Director, Center for Environmental Studies, Anna University Chennai-25 அவர்களிடமிருந்து பட்டியல் வரப் பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண் : 4421/2015/இ1 | **தீர்மான எண்:373**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 8) மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்களின் கடித எண்கள் : மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் / தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் / நானக / கோ.எண். தொழிற்சாலை / 2018 நாள் 04.07.2018ன் படி இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்டத்தி கீழ் 1)ஆறுபாதி கிராமத்தில் அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு இசைவாணை புதுப்பித்தல் 2018–2019ம் ஆண்டுக்கான தொகை ரூ.21800/– இந்நகராட்சி பாதாள சாக்கடை திட்ட நிதியிலிருந்து வழங்கிடவும், மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் / தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் / நானக/ கோ.எண். தொழிற்சாலை / 2018 நாள் 04.07.2018ன் படி இந்நகராட்சி 2) ஆடுவனத கூடத்திற்கு 2018–2019ம் ஆண்டுக்கான இசைவாணை கட்டணம் ரூ.10000/– இந்நகராட்சி வருவய் நிதியிலிருந்து வழங்கிடவும் மேலும் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் / தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் / நானக/ கோ.எண். தொழிற்சாலை / 2018 நாள் 09.07.2018ன் படி இந்நகராட்சி 3) நானக எரிவாயு தகனமேடைக்கு 2018–2019ம் ஆண்டுக்கான இசைவாணை கட்டணம் ரூ.12200/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண் : 7724/99/இ2 | **தீர்மான எண்:374**<br><br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 375 | **9)** இந்நகராட்சியில் உள்ளூர் மற்றும் வெளியூர் தபால் அனுப்ப வேண்டியுள்ளதால் அஞ்சல் வில்லையின் உத்தேச செலவினம் ஆண்டிற்கு ரூ. 50000/– ஆகும் மேற்படி இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்:375**<br><br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 376 | **10)** மயிலாடுதுறை நகராட்சி பொது சுகாதாரம் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழிகாட்டு நெறிமுறைகள் R.o.c.No. 2571/2017/J1. நாள் 28.11.2017–ன்படியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட கருத்துருவின்படி நகரில் 36 வார்டுகளிலும் டெங்கு தடுப்புபணி பார்க்க தேவையான டெங்கு மஸ்தூர்கள்(DBC) ஆகஸ்ட் –2018 மாதத்திற்கு 20 பணியாளர்களும் செப்டம்பர் முதல் பிப்ரவரி–2019 பருவமழை மற்றும் குளிர் கால டெங்கு பரவும் வாய்ப்பு மிகுந்த பருவகாலத்தில், அக்காலத்திற்கு 43 (DBC) டெங்கு மஸ்தூர்கள் மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் நபர் 1–க்கு, நாள்–1–க்கு ரூ.270/– வீதம் ஊதியத்தில் ஆகஸ்ட் –2018 முதல் பிப்ரவரி–2019 வரை நியமனம் செய்துக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.22,68810/– ரூபாய் (இருபத்து இரண்டு லட்சத்து அறுபத்து எட்டாயிரத்து எண்ணூற்று பத்து மட்டும்)–த்திற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண். 3014/2017/எச்1** | **தீர்மான எண்:376**<br><br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |
| 377 | **11)** மயிலாடுதுறை நகராட்சியின் ஆணையர், நகராட்சி பொறியாளர், நகர்நல அலுவலர் மற்றும் நகரமைப்பு அலுவலர், நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மான எண்:377**<br><br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |

| | | |
|---|---|---|
| 378 | **12)** தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மயிலாடுதுறை நகராட்சியில் உள்ள **36** வார்டுகளில் கழிவறை இல்லாத வீடுகள் கணக்கெடுக்கப்பட்டு பயனாளிகளுக்கு அரசு மான்யதொகை ரூ.**8000/-** வழங்கிட தெரிவிக்கப்பட்ட அரசாணைக்கிணங்க, மத்திய அரசு வழங்கும் பங்குதொகை ரூ.**4000/-** மாநில அரசு வழங்கும் பங்குதொகை ரூ.**2000/-** மற்றும் நகராட்சி வழங்கும் பங்குதொகை ரூ.**2000/-** வீதம் கூடுதல் தொகை ரூ.**8000/-** வீதம் இதுவரை கழிவறை கட்டி முடிக்கப்பட்ட பயனாளிகளுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது **2017-2018** ஆம் ஆண்டிற்கான அலகுகளில் கட்டி முடிக்கப்பட்ட தனிநபர் பயனாளிகள் **72** நபர்களுக்கு தனித்தனியாக தொகைரூ.**8000/-** வீதம் வழங்கிடவும், ஒப்பந்தக்காரர்கள் மூலம் கட்டிய கழிவறைகள் **18** எண்ணிக்கைக்கும் ரூ.**8000/-** வீதம் வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், வறுமை நிலையில் உள்ள பயனாளிகளுக்கு கழிவறைக்கான மேற்கூறை கதவுகள் மற்றும் கழிவுநீர்தொட்டிக்கான உறை, மூடி அமைத்திட செலவுத்தொகை ரூ.**2600/-** வீதம் ஒப்பந்ததாரர் மூலம் செலவினம் மேற்கொள்ளப்பட்டது. அதனை சமூக பொறுப்புநிதி(CSR Fund) நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அனுமதிக்கலாம்.** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வறுமை நிலையில் உள்ள பயனாளிகளுக்கு கழிவறை கதவு, மற்றும் மேற்கூரை அமைத்தற்கு பணியின் அவசரம், அவசியம் கருதி 138 பயனாளிகளுக்கு CSR நிதியிலிருந்து ஏற்கனவே ரூ.2000/- வீதம் வழங்கியதற்கு தனி அலுவலர் பின்னேற்பு வழங்கலாம்.<br><br>ந.க.எண். 4232/2016/எச்1 | **தீர்மான எண்:378**<br>ஏற்றுக்கொள்ளப்பட்டது |